# சென்னையில் சுற்றுவட்டப்பாதை: மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டம்

**சென்னை, டிச. 6:** சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டம் அடுத்த 6 ஆண்டுகளில் முடிந்து, ரயில் சேவை தொடங்கும் போது, சென்னை நகரை இரண்டரை மணி நேரத்தில் பயணிகள் ஒற்றை ரயில் பயணத்தில் சுற்றி வரும் விதமாக, சுற்று வட்டப்பாதை அமைக்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

**மெட்ரோ ரயில் திட்டம்:** சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதமாக, 45 கி.மீ. தொலைவில் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் நிறைவடைந்து, விமான நிலையம்-வண்ணாரப்பேட்டை வரை நீல வழித்தடத்திலும், எம்.ஜி.ஆர். சென்ட்ரல்-பரங்கிமலை வரை பச்சை வழித்தடத்திலும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன.

**இரண்டாம் கட்ட திட்டம்:** இதற்கிடையில், 118.9 கி.மீ. தொலைவிலான இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் அறிவிக்கப்பட்டது.

மாதவரம்-சிப்காட் (45.8 கி.மீ.), மாதவரம்-சோழிங்கநல்லூர் (47.0), கலங்கரை விளக்கம்-பூந்தமல்லி (26.1 கி.மீ.) ஆகிய 3 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. இதன்படி, இந்தத் திட்டத்துக்கு ரூ.61,843 கோடியாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்தத் திட்டப்பணிகளை தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

118.9 கி.மீ தொலைவுக்கான இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்ட கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டு 2026-க்குள் தயாராக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சுற்றுவட்டப் பாதை:** இந்நிலையில், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டம் முடிந்து ரயில் சேவை தொடங்கும்போது, சென்னை நகரை இரண்டரை மணி நேரத்தில் ஒற்றை ரயில்பயணத்தில்பயணிகள் சுற்றிவரும் விதமாக,சுற்றுவட்டப்பாதை அமைக்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதாவது மாதவரத்தில் இருந்து சென்னையின் கிழக்கே அடையாறு, மேற்கே கோயம்பேடு வழியாக சோழிங்கநல்லூர் வரை 81 கி.மீ. தொலைவுவரை சுற்றுவட்டப்பாதை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றுவட்டப் பாதையில் வழித்தடம்-3 (மாதவரம்-சிப்காட் 45.8 கி.மீ தொலைவு), வழித்தடம்-5 ( மாதவரம்-சோழிங்கநல்லூர் 47.0 கி.மீ. தொலைவு) ஆகியவற்றை இணைக்கும். இந்த சுற்றுவட்டப் பாதை, சென்னை சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து விமானநிலையம் மெட்ரோவை இணைக்கும் முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் செயல்படும் நேரடி பாதையை ஒத்து இருக்கிறது.

118.9 கி.மீ தொலைவுக்கான இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்ட கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டு, 2026-க்குள் ரயில் சேவைக்கு இது தயாராக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஒரு மணி நேரத்தில் 7 ரயில்கள்:** இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: இந்த சுற்று வட்டப்பாதையில் மாதவரத்தில் இருந்து கோயம்பேடு, சோழிங்கநல்லூர், அடையாறு வழியாக மாதவரத்தை அடையும். ஒவ்வொரு மணி நேரத்துக்கும் ஏழு ரயில்கள் இயக்கப்படும். ஒவ்வொரு 8.5 நிமிடத்துக்கும் ஒரு ரயில் இயக்கப்படும். பெரும்பாக்கத்தில் இருந்து (மாதவரம்-சோழிங்கநல்லூர் வழித்தடம்-5 இல்) பெரம்பூருக்கு (மாதவரம்-சிப்காட் வழித்தடம்-3) அல்லது தரமணியில் இருந்து (மாதவரம்-சிப்காட் வழித்தடம்-3) திருமங்கலத்துக்கு(மாதவரம்-சோழிங்கநல்லூர் வழித்தடம்-5) பயணிக்க காத்திருக்கும் பயணிகள் ரயிலில் ஏறலாம். இந்த வழித்தடத்தில் உள்ள ரயில்கள் போரூர் சந்திப்பில் இருந்து ஒற்றை ரயில் பயணத்தில் பெருங்குடி அல்லது காரப்பாக்கம் உள்பட பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள நிலையங்களுக்கு பயணிகளை அழைத்துச் செல்லும். இதன்மூலம், பயணிகள் ஒரு ரயில் பயணத்தில் நேரத்தை மிச்சப்படுத்தலாம் என்றனர்.

**பயணிகள் வருவாய் அதிகரிக்கும்:** இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் தொடர்பாக விரிவான திட்ட அறிக்கையில், இந்த சுற்றுவட்டப் பாதை ரயில் நடவடிக்கை மூலமாக, மாதவரம்-சிப்காட் வழித்தடம்-3 இல் போக்குவரத்து தேவையைப் பூர்த்தி செய்வதோடு, மாதவரம் முதல் எம்.எம்.பி.டி. இடையே 5,171 பயணிகள் பயணிப்பார்கள். மாதவரம் புறநகர் பேருந்து முனையம்(எம்.எம்.பி.டி)-சோழிங்கநல்லூருக்கு 35,714 பேர் பயணிப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம், பயணிகள் வருவாய் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சுற்றுவட்டப் பாதையில் ஒவ்வோர் ரயிலிலும் 3 கார் ரேக் அடங்கிய 21 ரயில்கள், ஆறு கார் ரேக் அடங்கிய 15 ரயில்களும் 2025-ஆம் ஆண்டுக்கு தேவைப்படுகிறது என்று இயக்கப் பிரிவு அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளார்கள். இது அடுத்த 30 ஆண்டுகளில் அதாவது 2055-இல் 37 ஆறு கார் ரேக்குகளாக அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளார்கள்.

